# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 12.09.2019

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9211/B/18**

திருமதி.D.விஜயலட்சுமி — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகம்,
பாலசுந்தரம் சாலை,
கோயம்புத்தூர் - 18 — பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வாணையத்தால் இன்று (12.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திருமதி.D.விஜயலட்சுமி அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திரு பெ. சுரேஷ் குமார், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 26.09.2018 தேதியிட்ட மனுவில், கோவை மாவட்டம், துடியலூர் கிராமம், 403, 44 விவேகானந்தர் தெருவில் அமைந்துள்ள வீடும், அந்த வீட்டை சார்ந்த காலியிடமும், தனது மாமியார் லிங்கம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனுடைய சர்வே எண் 614/7 மற்றும் பட்டா எண் 390/2C என்றும், மேற்படி லிங்கம்மாள் அவர்களுக்கு எதன் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்றும், அதனுடைய அரசாணை எண் என்ன என்றும், மேலும் இது சம்பந்தமாகவே 5 இனங்களில் தகவல் கோரி கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார்.

3. தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 31.10.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 07.12.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (12.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு 10.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் நேரிடையாக வழங்க எடுத்து வந்திருப்பதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தில் சார்வு செய்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், இதுவரை எந்தவித தகவல்களும், ஆவணங்களும் தனக்கு கிடைக்கவில்லை என்றும், கோவை மாவட்டம், துடியலூர் கிராமம், 403, 44 விவேகானந்தர் தெருவில் அமைந்துள்ள வீடும், அந்த வீட்டை சார்ந்த காலியிடமும், தனது மாமியார் லிங்கம்மாள் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனுடைய சர்வே எண் 614/7 மற்றும் பட்டா எண் 390/2C என்றும், மேற்படி லிங்கம்மாள் அவர்களுக்கு எதன் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்றும், மேலும் இது சம்பந்தமாக பல்வேறு கேள்விகளை பிரிவு 6(1) மற்றும் பிரிவு 19(1)ன்கீழ் கேட்டுள்ளதன் அடிப்படையில், பிரிவு 11ன் வழங்க இயலாது என்று பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டது என்றும், கிட்டத்தட்ட பல ஆண்டுகள் காலமாக வருவாய் துறைக்கு பல்வேறு மனுக்கள் அனுப்பியும், தன்னுடைய பட்டா சம்பந்தமான விவரங்கள் கிடைக்கப்பெறாததால், தன்னுடைய பட்டா சம்பந்தமான உண்மைதன்மையை அறிய முடியவில்லை என்று ஆணையத்தில் தெரிவித்து, தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்று தருமாறு ஆணையத்திடம் வேண்டி கொண்டார்.

6. மேற்சொன்ன ஆவணங்களை பரிசீலிக்கையில், மனுதாரருக்குரிய தகவல்கள் அவருக்கு கிடைக்க வேண்டும் என ஆணையம் கருதி, மேற்படி மனுதாரரின் தகவல் சம்பந்தமான உண்மைதன்மையை, கோயம்புத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ஆராய்ந்து 20 நாட்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று ஆணையம் உத்திரவிட்டு, இவ்வழக்கின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் பிறப்பிக்கப்படுக்கின்றன:-

1. **மனுதாரரின் 26.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பாக, கோயம்புத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகை தந்து, மனுதாரர் கோரியுள்ள தகவல் அடங்கிய ஆவணங்களை தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(3)(b)ன்கீழ் ஆய்வுசெய்து, கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர், தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் / பொதுத் தகவல் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கையை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 20 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு**

**வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, கோயம்புத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் இவ்வாணையத்தில் நடைபெறும் மறுவிசாரணையன்று நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க ஆணையம் உத்தரவிடுகிறது.**

2. **வழக்கின் மறுவிசாரணை பிறிதொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது. நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும். அன்றைய தின விசாரணைக்கு கோயம்புத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் மற்றும் கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையுடனும் ஆஜராக ஆணையம் உத்திரவிடுகிறது.**

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9211/B/18</u>**
வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
துடியலூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்- 641 034.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அலுவலகம்,
பாலசுந்தரம் சாலை,
கோயம்புத்தூர் - 18

திருமதி.D.விஜயலட்சுமி, க/பெ.தேவராஜ்,
எண்.161/83b, பொன்னுரங்கம் ரோடு (மேற்கு),
R.S.புரம்,
கோயம்புத்தூர் -641 002

Copy to: File / Stock File
SC/PA/16.09.2019